8 SEP 1971 JAFFNA ... UNDERGRADUATE LIBRARY

# கல்விக்காக 65 கோடி ரூபா செலவிடப்படும்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 220

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 209

யாழ்ப்பாணம் ஆவணி 23 றஜப் 17 புதன்கிழமை (8-9-71)

கோட்டை செவ்வாய்

1972ம் ஆண்டிலிருந்து கல்வியில் கொண்டுவரப்படஇருக்கும் புதிய மாற்றங்கள் நாட்டின் சோஷலிசத் திட்டங்களுக்கு மாணவர்களைபயன்படுத்தும் வகையாகவே இருக்கும் என்று கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி கலாநிதி பிரேமதாச உடகம செய்தித் திணைக்களத்தில் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்

மேலும் அவர் அடுத்த வருடம் 6ந் தரத்திலிருந்து மாற்றஞ்செய்யப்படும் கல்விச் சீர்திருத்தங்கள் கிராமப்புற நகர்ப்புற மாணவர்களுக்கு சமவாய்ப்பை அளிக்கும். இப் புதிய கல்வித்திட்டம் நாட்டின் பொருளாதாரத்தை சோஷலிசமுறையில் சீர்திருத்த வாய்ப்பளிக்கும். இவ்விதபுதியசீர் திருத்தங்களுக்கு மக்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், செய்தித்துறை நிறுவனங்கள் பக்கபலமாக இருக்க வேண்டும் என்று கூறிய திரு உடகம அடுத்த ஆண்டு கல்வித் திட்டத்திற்காக 65 கோடி ரூபா செலவிடப்படுமென்று தெரிவித்தார்.

## விண்வெளியில் லூனா—18

மாஸ்கோ, செப். 7

சோவியத் யூனியன் புதிதாக அனுப்பியுள்ள லூனா—18 ஆளில்லாக் கலம் சந்திர வட்டத்துக்குள் பிரவேசித்துள்ளது.

## 5 ஆண்டு அபிவிருத்தி -வரவு செலவுத்

# திட்டங்கள் நவம்பர் 6ல் சமர்ப்பிக்கப்படும்

## ஆட்சிமன்றத்தில் நிதி அமைச்சர் தகவல்

கொழும்பு, செவ்வா

புதிய ஐந்து ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டமும் 1972ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டமும் ஒரே நேரத்தில் நிதி அமைச்சர் கலாநிதி என். எம். பெரேரா நவம்பர் மாதம் 6-ம் திகதி ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

நிதி அமைச்சர் என் எம் பெரேரா ஒக்டோபர்மாதத்திலிருந்து டிசம்பர் வரையிலான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை ஆட்சி மன்றத்தில் சமர்ப்பித்துப் பேசுகையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் 86 கோடியே 20 லட்சம் செலவாகும் ஆகஸ்ட்மாதம் இறுதி வரையில் நாட்டின் வருவாய் 47 கோடியே 10 லட்சமாக இருந்தது. பெரும்பாலும் நாட்டின் செலவினங்கள் உள்நாட்டு வருவாயைக் கொண்டே சமாளிக்கப்பட்டன. ரூபா மாற்றத்தினால் அரசாங்கம் 60 கோடி ரூபாவைப் பெறக்கூடியதாய் இருந்தது. 2 கோடி 50 லட்சம் ரூபா கட்டாயசேமிப்பின்மூலம் பெறப்பட்டது. கடந்த இறுதி வரவுசெலவுத் திட்டத்தில் வருமானம் பற்றுக்குறையாய் இருந்த திட்டத்தட்ட 12 கோடி 70 லட்சம் ரூபா பற்றுக்குறை ஏற்பட்டது. இதற்குதீர்வைகளிலிருந்து பெறப்படும்வருவாய் குறைந்ததே காரணமாகும் என்றார்.

### 12 ஆயிரம் பேர் கைது ஜே. ஆர். கேள்வி

நாட்டில் ஏற்பட்ட பயங்கரச் செயலையடுத்து இக

(2-ம் பக்கம் பார்க்க)

## தந்திக்கம்பி திருட்டுகள் வடக்கில் குறைகின்றன

### பொலிஸ் அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், புதன்

வட பகுதியில் அதிகரித்து வந்த தந்திக்கம்பித் திருட்டு குறைந்துள்ளன. கடந்த நான்கு தினங்களில் தந்திக்கம்பித் திருட்டு எதுவும் நடைபெற்றதாகத் தங்களுக்குப் புகார் கிடைக்கவில்லையென்று வடபகுதிப் பொலிஸ் அதிபர் தெரிவித்தார்

தந்திக்கம்பித் திருட்டுக்கு தந்திப் பகுதியில் வேலை பார்க்கும் சிலர் அல்லது வேலைபார்த்து ஓய்வுபெற்றவர்களின் ஆலோசனையின் உதவியும் ஒத்துழைப்பும் இருக்க வேண்டுமெனவும் அவர்களின் உதவியில்லாமல் தந்திக்கம்பித் திருட்டு இங்ஙனம் நடைபெறமுடியாதென்றும் பொலிசார் கருதுகின்றனர்

(5-ம் பக்கம் பார்க்க)

# ‘கூட்டுமுன்னணியை கம். கட்சி அழித்துவிடாது’

## கம்புறுபிட்டியா எம். பி.

கம்புறுபிட்டிய, செவ்.

“கூட்டுமுன்னணியின் வளர்ச்சிக்குப்பாடுபட்ட கம்யூனிஸ்ட்கட்சி அதனை அழிப்பதற்கு முனையாது” என்று கம்புறுபிட்டிய எம். பி. திரு. ஏலியன் நாணயக்கார கூறினார்.

விவசாயிகளுக்கு அறிமுக அட்டைகள் வழங்கும் வைபவமொன்றில் திரு. நாணயக்கார பேசினார்.

கம்யூனிஸ்ட்கட்சி அரசாங்கத்திலிருந்து விலகிவிடப் போவதாக சில பத்திரிகைகள் கூறுகின்றன கூட்டு முன்னணியை வளர்க்கப் பாடுபட்ட கம்யூனிஸ்ட் கட்சி அதனை அழிக்கவில்லை என்றார் அவர் 1970-ம் ஆண்டில் அப்போதிருந்த கிலேவாகி ஏற்றத்துக்கு ஐக்கிய தேசியக்கட்சியை நாம் குற்றஞ்சாட்டினோம். ஆனால் இன்று விலைவாசிகள்

5-ம் பக்கம் பார்க்க

## மரண அறிவித்தல்

### நாகமுத்து செல்வம்

நாகமுத்து செல்வம் காலமாகிவிட்டார். இவர் ஸ்ரீலங்கா புத்தகசாலை, ஸ்ரீலங்கா அச்சகம், ஸ்ரீலங்கா பேப்பர் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் நா. தெய்வேந்திரம், நா. கந்தசாமி அவர்களின் அருமைத் தாயாருமாவர். அன்னாரின் பூதவுடல் 8-9-71 புதன்கிழமை காலை 9 மணிக்கு 14 அம்மன் வீதி, கந்தர்மடத்திலிருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். தயவுசெய்து உறவினர்களும் அன்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்:

ஸ்ரீலங்கா புத்தகசாலை, உரிமையாளர். நா. தெய்வேந்திரம், நா. கந்தசாமி.

3008

## பருத்தித்துறை கொலை வழக்கு:

# ‘செனிவரத்னவை சாவகச்சேரி கோர்ட்டில் காணவில்லை’

யாழ்ப்பாணம், புதன்

திருஞானசம்பந்த மூர்த்தி எனது கந்தோருக்கு வந்தார்- அவர் தன் சொந்த விருப்பத்திலேயே வந்தார்- பருத்தித்துறை காக்கா கொலை சம்பவம் பற்றி சில தகவல்களை, தந்தார்’

பருத்தித்துறை கொலை வழக்கில் சாட்சியமளித்த உதவிபொலிஸ் சுப்பிரிண்டன் திரு எம் டி சில்வா சாட்சியமளிக்கையில் மேற் கண்டவாறு கூறினார்-

இவ் வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏ எம் டி சில்வா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவருகிறது-

ஏ எஸ் பி சில்வா மேலும் கூறுகையில், இக் கொலை பற்றி பருத்தித்துறை பொலிசார் விசாரணை செய்ததில் எவ்வித பலனும் கிடைக்கவில்லை என்றும் அதன்பின் இரகசியபொலிசார் தலையிட்டார்களென்றும் தெரிவித்தார்-

பொலிஸ் சார்ஜண்ட் பொன்னம்பலம் அந்தரம் சாட்சியமளிக்கையில் மாஜிஸ்டிரேட் பங்களாவிற்கு இரவு 7 மணிக்கு சென்றதாகவும், இன்ஸ்பெக்டர் செனிவரத்ன வந்ததாகவும் கூறினார்.

காமாட்சி அம்மாள் தொழிற்சாலையைச் சேர்ந்த கந்தையா இராசரத்தினம் சாட்சியமளிக்கையில், காக்காவின் கடைக் கதவும், திறப்பும் செய்ததாக கூறினார்

சிறைச்சாலை காவலாளர் சின்னையா ஐயாத்துரை சாட்சியமளிக்கையில் இன்ஸ்பெக்டர் செனிவரத்னவை இப்ப தெரியுமென்றும் அவரை சாவகச்சேரி கோர்ட்டில் காணவில்லையென்றும் கூறினார் தான் 1ம் எதிரியையே பார்த்துக் கொண்டிருந்ததாகவும் கூறினார் கோர்ட்டிலிருந்து சாவகச்சேரி வாடிவீட்டைப் பார்த்ததாகவும் கூறினார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

—

## இன்று ஐயந்தி விழா

யாழ்ப்பாணம், புதன்

இமயஜோதி ஸ்ரீசுவாமி சிவானந்தரின் 85-வது ஜயந்தி விழா இன்று மாலை நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும் திரு. செ. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் ஸ்ரீ ல ஸ்ரீ சுவாமி நாதத்தம்பிரான் சுவாமிகள் “சிவானந்த விஜயம்” என்னும் பொருள்பற்றி கதாகாலஷேபம் நடத்துவார்கள் அரசினர் தகவல் திணைக்களத்தின் படக்காட்சியும் ஆராதனையும் பஜனையும் இடம்பெறும்

## வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் வயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்துகொடுக்கப்படும் ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524

காலம் பெறுமதியானது. ஒரு பைக்கட் மிக்கவைற் சலவைப்பவுடரில் அநேக துணிகளை சலவைசெய்யலாம் வெற்றுறை ஒன்றை அனுப்பி வெளியீட்டுப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள் மில்க்வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 3520

### விற்பனைக்கு

கேசரோக நிவாரண தைலம்: உயர்தர மூலிகைகளால் சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டது. தலைமயிர் கொட்டுதல், புழுவெட்டு, இளநரை, சொடுகு முதலிய கேசரோகங்களுக்கு சிறந்த நிவாரணி. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, யாழ்ப்பாணம் கொழும்பு 3523

### தேவை

பழைய பித்தளை அல்லது பாவிக்க முடியாத நிலையிலுள்ள செம்புச் சாமான்கள் தேவை. தகுந்த விலை கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிடெட், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3538

### தவறிவிட்டது

காலஞ்சென்ற பிரதான சாரண ஆணையாளராக இருந்த திரு. கனகரா வின் பெரிய புகைப்படம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கவும். 3557

### விற்பனைக்கு

ஸ்ரீ காந்தா அச்சக வெளியீடு ஐந்தாம் வகுப்பு மாணவர் தேர்ச்சிக்கு புதுமுறை மாதிரி வினாக்கள் கணிதம்-75 சதம், தமிழ்-75 சதம் ஆங்கிலம்-75 சதம். சூழல்-75 சதம். விவேகானந்த சபைப் பரீட்சைக்கும் அமைவான சைவசமய பாட மாதிரி வினாக்கள் 95 சதம். ஸ்ரீ காந்தா அச்சகம்—புத்தகசாலை, யாழ்ப்பாணம் 3551

ஹோல்டன் ஸ்பெஷல் 3ஸ்ரீ 7903 கார் ஒரே சொந்தக்காரர். ஸ்ராண்டட் (ஒறிஜினல்) பிஸ்ரன்; விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க- ராஜா மிக நிலையம், கொக்குவில். 3549

சாவகச்சேரி பட்டணத்திலிருந்து 1 1/2 மைலுக்குள் கச்சாய் ரோட்டில் ஒவ்வொன்றும் ஏழு பரப்புக் கொண்ட சிறந்த கட்டிட கெல்ஸ்மன் தென்னந்தோட்டம் தம்பு தோட்டத்திற்கு எதிராகவுள்ளது. நல்ல தண்ணீர், கட்டிடத்திற்கோ அல்லது விவசாயத்திற்கோ ஏற்றது. அருள் நகாணியல், 25, செம்மணி வீதி, நல்லூர். 3555

### தேவை

அரிசி மில்லுக்குப் பாவிக்கப்படும் டீசல் என்ஜின், ஜப்பானிஸ் ஹலர், கிறைண்டர் உடனடியாகத் தேவை. உரிமையாளர், சாந்தி அரிசி ஆலை, வட்டுக்கோட்டை. 3553

## திட்டங்கள்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தட்ட 12 ஆயிரம் பேரை அரசாங்கம் கைதுசெய்துள்ளது இதில் 2 ஆயிரம் பேர் குற்றம் செய்திருக்கலாம் மீதியானவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், மிகுதிப் பேரை விடுதலைசெய்யாமல் வைத்திருப்பது சரியல்ல ஒன்றில் அவர்களை விசாரணைக்குட்படுத்தவேண்டும் ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த செனட்டர் நியதியால, மத வாச்சியில் ஐக்கியதேசியக்கட்சி அபேட்சகராகப் போட்டியிட்ட ஆரியதாச ஆகியவர்களையும் கைதுசெய்துள்ளனர். இவர்கள் மீது எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தாமல் கைதுசெய்து சிறையில் வைத்திருப்பது சரியல்ல. இவற்றை நோக்கும்போது நாட்டில் இராணுவ ஆட்சியே நடைபெறுவதாக எண்ணத் தோன்றுகிறது என்றார்.

இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. சுவரண்சிங் இலங்கைக்கு இம்மாதம் 9ந் திகதி வருவதைக் குறிப்பிட்டு அவர், அவருடன் இலங்கை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தும்பொழுது மிகவும் கவனமாக நடந்து கொள்ளவேண்டும் ஏனென்றால் இந்தியா சோவியத் யூனியனுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. இதேபோல இலங்கைக்கும் பிரிட்டனுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று இருக்கிறது. எனவேதான் திரு. சுவரண்சிங்குடன் இலங்கை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தும்போது மிகவும் கவனமாக நடந்து கொள்ளவேண்டும் என்றார்.

## கேள்வி அறிவித்தல்

### வவுனியா நகரம்

வவுனியா நகர வாடிவீட்டுப் பராமரிப்பு வேலைகள் செய்வதற்குப் பதிவுபெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் 17-9-1 நண்பகல் 12- மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்

கேள்வி வைப்புப்பணமாக ரூபா 25/-ம், படிவப் பெறுமதியாக ரூ 2 50/-ம் 14—9—71 நண்பகல் 12-00 மணிக்குமுன் செலுத்திப் பெறப்படும் படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும்.

தேவரத்தினம் டான்வோத்
விசேட ஆணையாளர்,
வவுனியா நகரம்

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
வவுனியா நகரம்,
வவுனியா.
2-9-71 3007

லாலாசோப்

## கரபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

அச்சுவேலி லாலாசோப் ஸ்தாபனத்தாரின் ஆதரவில் நடைபெறும் மின்னொளிக் கரபந்தாட்டப்போட்டி நேற்று முன்தினம் மிகவிமரிசையாக ஆரம்பமானது. இப்போட்டியை அச்சுவேலி பொலிஸ் சார்ஜன்ட் திரு. கிருஷ்ணராசா குத்துவிளக்கேற்றித் தொடக்கிவைத்தார்.

முதல் நாள் போட்டியில் இமயாணன் விளையாட்டுக் கழகம், காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை 2-0 ஆட்டங்களாலும், 2-வது போட்டியில் உடுவில் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சிறுப்பிட்டி உதயதாரகை கழகத்தை 2-0 ஆட்டங்களாலும் வெற்றி பெற்றன.

### இன்றைய ஆட்டம்

இன்று மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும் முதல் போட்டியில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக "பி" பிரிவுக் கோஷ்டியும் பருத்தித்துறை எதிரொலி கோஷ்டியும் மோதுகின்றது. 2-வது போட்டியில் அச்சுவேலி நியூஸ்ரார் கோஷ்டியும் நெல்லியடி வெல்வெற் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (தே நி)

......

## பருத்தித்துறையில் பிரசாரம்

பருத்தித்துறை, செவ்

இம்மாதம் 6-ம் திகதி தொடக்கம் பருத்தித்துறை பகுதியிலுள்ள வைத்திய அதிகாரி பிரிவில் கல்வியும் "குடும்பக் கட்டுப்பாடும்" என்னும் விஷயம்பற்றியபிரசாரக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இக் கூட்டங்கள் இம்மாதம் 9ம் திகதிவரை நடைபெறவுள்ளன.

## கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை

### கார்த்திகை 1971

வடமாகாண ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்படும் இப்பரீட்சைக்குத் தோற்றவிரும்பும் பாடசாலை மாணவர்களிடமிருந்து 15-9-71க்கு முன்பாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்து 13-9-71க்கு முன்பாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்பத்திரங்களைக் கீழ்க்காணும் விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

1971—72 பரீட்சைக்குழு உத்தியோகத்தர்கள் பின்வருமாறு:

தலைவர்: திரு. M. பேராயிரவர் (4-ம் கட்டைபருமலாவி ரோட், உடும்பிராய்)

காரியதரிசி: திரு. மு. திருநீலகண்டசிவம் (12. ஒடை ஒழுங்கை, வண்ணார்பண்ணை.)

உபகாரியதரிசி: திரு. A. கல்யாணசுந்தரேசன் (தேவிமனை உடுவில் மேற்கு, சுன்னாகம்.)

பரீட்சை சம்பந்தமான கடிதங்கள் யாவும் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

கௌரவ காரியதரிசி
மு. திருநீலகண்டசிவம்
3609

## மின்சாரம் விரைவில் கிடைக்கும்

ஏழாலை திங்கள்

ஏழாலைக் கிராமசபையைச் சேர்ந்த புன்னாலைக்கட்டுவன் வலாலி மின் விஸ்தரிப்பு வேலைகள் முடிவடைந்து மின்சாரம் விரைவில் கிடைக்குமென நம்பப்படுகிறது இம்மின்சாரவிநியோகத்தை விரைவில் மேற்கொள்ளுமாறு கோரும் பிரேரணை ஒன்று கிராமசபை உறுப்பினர் திரு வ தம்பாபிள்ளையால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

—

## நல்லையில் பாரதிவிழா

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் பாரதிமன்றம் இவ்வாண்டும் பாரதிவிழா கொண்டாடவிருக்கிறது. வழமைபோல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இவ் விழா நடைபெறும்- மூன்று தினங்கள் நடைபெறும் இவ் விழாவில் சமயத்து அறிஞர்களின் சொற்பொழிவுகளும் சங்கீத வித்துவான்களின் இசைக்கச்சேரிகளும்மற்றும் கவியரங்கு முதலியனவும் இடம்பெறும்


தினசரி 4 காட்சிகள்
வின்சர் [யாழ்ப்பாணம்]
★ ஜெமினிகணேசன்
★ கே. ஆர். விஜயா
நாகேஷ், பி. எஸ். வீரப்பா, நிர்மலா
நடித்த
சங்கமம்

3-வது ஜனத்திரள் வாரம
வெலிங்டன் (யாழ் நகர்) பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00 மணி.
லிடோ (யாழ்.நகர்) (காலை 10-30 மட்டும்)
மற்றும்
கெப்பிட்டல்—பிளாஸா
திரைகளில்





நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
(3 வேடங்களில்)
ஜெயலலிதா
நாகேஷ், நம்பியார், சுந்தரராஜன்
நடித்த
தெய்வ மகன்

லிடோ [யாழ்நகர்]
தினசரி பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.
... குமார் - வைஜயந்திமாலா
நடித்த
மதுமதி
(ஹிந்திச் சித்திரம்)

நகுலேஸ்வரி சினிமா
கன்னாகம்
தினசரி: 4-30
சனி, ஞாயிறு 10-30
SODOM and COMORRAH
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
கூண்டுக்கிளி

மனோகரா
(யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு காலை 10-30
பம்பாயில்
சி. ஐ. டி. 555
(தமிழ்)

வெலிங்டன் சினிமா
மானிப்பாய்
... 2-30, 6-30, 10-00
என். எஸ். கண்ணப்பா- வி. என் ஜானகி - நம்பியார்
நடித்த
தேவகி

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m.
Genne Barry
Senta Berger
in
ISTANBUL EXPRESS
தினசரி பி.ப. 2-00, 9-45
ஜெமினி—ஜமுனா
நடித்த
நல்ல தீர்ப்பு

ராணி (யாழ்ப்பாணம்)
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
இருவர் உள்ளம்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி.ப. 2-30, மாலை 6-30 இரவு 10 மணி
பின்னணிப் பாடகர்கள்
★ ரி. எம். சௌந்தரராஜன்
★ ஏ. எல். ராகவன்
ராஜ்ஸ்ரீ — விஜயகுமாரி — நாகேஷ்
நடித்த
கல்லும் கனியாகும்

# நிலத்துக்கடியில் அணுகுண்டு சோதனைகள் நடத்துவதையும் நிறுத்த கோரிக்கை

## ஜெனிவா மாநாட்டில் கனடா வற்புறுத்தல்

ஜெனிவா, செப். 7

**நிலத்துக்கடியில் நடத்தப்பட்டு வரும் அணுகுண்டு சோதனைகளுக்கும் முற்றுப்புள்ளிவைக்கும்படி கனடா அணுவல்லரசுகளைக் கேட்டிருக்கின்றது**

ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள அணு சக்தியை சமாதான நோக்கங்களுக்குப் பயன்படுத்துவது சம்பந்தமான உலகநாடுகள் மாநாட்டில் கனடா இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கின்றது.

காற்றுமண்டலத்தில் அணுகுண்டுசோதனைகளை நடத்துவதில்லையென ஏற்கனவே அமெரிக்கா, பிரிட்டன், சோவியத் யூனியன் ஆகிய மூன்று வல்லரசுகளும் உடன்பாடு செய்து கொண்டுள்ளன. இந்த உடன்படிக்கையில் பிரான்சும், சீனாவும் சேர்ந்து கொள்ள மறுத்துவிட்டன. இந்த நாடுகள் இரண்டும் தொடர்ந்து காற்றுமண்டலத்தில் அணுகுண்டு சோதனைகளை நடத்தி வருகின்றன.

உடன்பாடு செய்துகொண்ட மூன்று நாடுகளும் நிலத்துக்கடியில் மாத்திரம் அணுகுண்டு சோதனைகளை நடத்திவருகின்றன.

இந்தச் சோதனைகளையும் முற்றாக நிறுத்திவிடும்படி கனடா இப்பொழுது கோரிக்கைவிடுத்திருக்கின்றது. குறிப்பாக அலாஸ்கா பிரதேசத்தில் அமெரிக்கா நடத்தவிருக்கும் பெரிய அளவிலான அணுகுண்டு சோதனைகளை நிறுத்திவிடும்படி கனடா வற்புறுத்தியிருக்கின்றது.

லத்தீன் அமெரிக்க நாடுகள், விசேஷமாக பெரு நாட்டின் எதிர்ப்பைத் தொடர்ந்து அண்மையில் பசுபிக் சமுத்திரத்தில் பிரான்ஸ் நடத்தவிருந்த அணுகுண்டு சோதனைகளை நிறுத்திவிட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

## உகண்டா குற்றச்சாட்டு

கம்பாலா, செப் 7

தான்சானியா போர் விமானங்கள் தொடர்ந்தும் தங்கள் பிராந்தியத்தில் பறப்பதாக உகண்டா அரசாங்கம் குற்றஞ் சாட்டியிருக்கின்றது.

---

சுக வாழ்வுக்குச்

## சிறந்த மருந்து'

சுழிபுரம், செவ்

விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளும் வீரர்கள் நிச்சயமாக நல்ல திடசாலிகளாக வாழலாம். மன அமைதியும் சுகவாழ்வும் பெற விளையாட்டு ஒன்று தான் சிறந்த மருந்தாகும். சுலபமாகப் பெறக்கூடிய யாட்டு மருந்தை நாம் பருகி பயன்படவேண்டும்- இவ்வாறு வலிமேற்கு விளையாட்டுக்கழகங்களின் இரண்டாம் பிரிவு வருடாந்த விளையாட்டுப்போட்டி முடிவில் பரிசுகளை வழங்கி உரையாற்றிய சுழிபுரம் கிராம சபைத் தலைவர் திரு சுந்தரசுவாமி குறிப்பிட்டார். போட்டி சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது- பரிசளிப்பு விழாவுக்கு விளையாட்டுப் போதனாசிரியர் திரு இ. சுப்பிரமணியம் தலைமைவகித்தார்- வட்டுக்கோட்டைக் கிராம சபைத் தலைவர் திரு எஸ். நிற்சிங்கம் நன்றிதெரிவித்துப் பேசினார்.

---

## 'ஐ. தே. கவின் கடனை அடைக்கிறோம்'

பாணந்துறை, செவ்.

"முன்னைய அரசாங்கம் தனது ஆட்சிக் காலத்தில் பெற்ற கடனுக்குத் தற்போதைய அரசாங்கம் 18 கோடி ரூபா வட்டிப்பணம் செலுத்தியுள்ளது. நடப்பு நிதி ஆண்டிற்குள் மேலும் 55 கோடி ரூபா வட்டிப் பணம் செலுத்தவேண்டியுள்ளது"

பாணந்துறையில் ஆயுர்வேத சிகிச்சை நிலையமொன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் தோட்டத் தொழில் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது. இந்த வருடம் எமக்கு 20 கோடி ரூபா அந்நிய செலாவணி கிடைக்கிறது ஐ. தே. கட்சி மேற்படி கடனைப் பெற்றிடாவிடின் இன்று நாம் இந்தப் பணத்தை நாட்டின் பல அபிவிருத்தித்திட்டங்களுக்குப் பயன்படுத்தலாம்.

## பாக். சிப்பாய்கள் ஓடிவிடுகிருர்களாம்!

புதுடில்லி, செப் 7

கிழக்குப் பாகிஸ்தானில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தான் ராணுவத்திலிருந்து தினமும் சிப்பாய்கள் தப்பி ஓடிவிடுகிருர்களாம். ஒரு நாளைக்கு குறைந்தது இருவர் அல்லது மூவர் இப்படி ஓட்டம் பிடிக்கிருர்களாம். சிப்பாய்களைவிட அவர்களுக்கு ஆதரவாக இருப்பவர்களே அதிகமாக ஓட்டம் பிடிக்கிருர்களாம். இப்படி ஓடுகிறவர்கள் விடுதலைப் படையினரிடம் சரணடைவதாகவும் கூறப்படுகின்றது. சில தினங்களுக்கு முன் சில்ஹெட் அரங்கில் மாத்திரம் 41 பேர் விடுதலைப் படையினரிடம் சரண் புகுந்ததாகக் கூறப்படுகின்றது.

விடுதலைப் படையினர் நேற்று பாகிஸ்தான் ராணுவ முகாம்கள் மீது கடும் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் செய்திகள் கூறின.

## பொலிஸ் சுட்டு 5 பேர் பலி

புதுடில்லி, செப் 7

இந்தியாவில் மகாராஷ்டிர மாகாணத்தில் பிராஜ் கிராமத்தில் கலவரத்தில் ஈடுபட்ட ஜனக்கூட்டம் ஒன்றின்மீது பொலிஸார் சுட்டதில் 5 பேர் கொல்லப்பட்டனர். சனக்கூட்டம் கற்களை வீசித் தாக்கியதில் 37 பொலிசார் காயமடைந்தனராம்.

## சிவானந்தர் ஜெயந்தி விழா

அரியாலை, செவ்வாய்

இமயஜோதி ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் 85வது ஜயந்திவிழா நாளை மாலை யாழ். திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் மேற்படி சங்கத்தினரால் திரு செ. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத் தம்பிரான் சுவாமிகளின் 'சிவானந்த விஜயம்' என்னும் கதாகாலட்சேபமும் நடைபெறும்.


**தம்பி அன் கோ.**

ஆரம்பமாகி முப்பதாவது ஆண்டில்

1. ரூபா 1000/- ஜுபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit)
வருடம் ரூபா 125/-வட்டி கொடுக்கப்படும்

2. ரூபா 500/- ஜுபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit)
வருடம் ரூபா 63/-வட்டி கொடுக்கப்படும்

குறிப்பு:-
இந்த ஜுபிலி சேமிப்பில் ஒருவரிடமிருந்து ரூபா 1000/- அல்லது ரூபா 500/- வாங்கப்படும்
மறுவிபரங்களுக்கு:-

**தம்பி அன் கோ.**
திருநெல்வேலி ... வண்ணார்பண்ணை.
யாழ்ப்பாணம்.


மே. ஜெர்மன் விமான விபத்து

## 120 பிரயாணிகளில் 18 பேர் பலியாகினர்

பொன், செப். 7

மேற்கு ஜேர்மனியில் பிரயாணிகள் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி விழுந்ததில் குறைந்தது 18 பேர் கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது: இந்த விமானத்தில் 120 பிரயாணிகள் இருந்தனர். விமான நிலையத்திலிருந்து கிளம்பிய சில நிமிடங்களுக்குள் விமானத்தில் கோளாறு ஏற்பட்டது. விமானத்தைப் பத்திரமாக இறக்கிவிட விமானி அவசர முயற்சி செய்தார் என்றாலும் விமானம் கீழேவிழுந்து நொருங்கிவிட்டது.

விமானம் விபத்துக்குள்ளாகியதில் 80 பேர் வரை பலியாகியிருக்க வேண்டும் என்று முதலில் வந்த ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறின. ஆனால் 18 பேர் மட்டுமே கொல்லப்பட்டிருப்பதாக கடைசியாக வந்த தகவல் தெரிவித்தது. 40 பேர் படுமோசமாகக் காயமுற்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன விமானத்தின் எஞ்சினில் ஏற்பட்ட கோளாறே இந்த விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

## ஹீத்—லிஞ்ச் பேச்சுகள் தொடர்கின்றன

லண்டன், செப். 7

வட அயர்லாந்து சம்பவங்கள் குறித்து ஐரிஷ் குடியரசுப் பிரதமர் ஜக் லிஞ்சும் பிரிட்டிஷ் பிரதமர் திரு. எட்வார்ட் ஹீத்தும் நேற்று 9 மணி நேரம் பேச்சுக்கள் நடத்தினர்.

பேச்சுக்கள் அமைதியான சூழ்நிலையில் நடைபெற்றதாக செய்திகள் கூறுகின்றன. பேச்சுவார்த்தைகள் இன்றைய தினமும் தொடர்ந்து நடைபெறவிருக்கின்றன.

வட அயர்லாந்து சம்பந்தமான தனது கொள்கைகளை பிரிட்டிஷ் பிரதமர் விளக்கியதாகவும், இந்தப் பிரச்னையில் தங்கள் நிலை என்ன என்று ஐரிஷ் பிரதமர் விளக்கியதாகவும் தெரிகின்றது.

நேற்று ஐரிஷ் குடியரசு தூதரகத்துக்கு வெளியே சனக் கூட்டம் ஒன்று ஆர்ப்பாட்டம் நடத்தியது "விற்றுவிட வேண்டாம், விற்றுவிட வேண்டாம்" என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கூச்சல் போட்டார்கள்.

திரு லிஞ்ச் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவர் திரு. வில்சனையும் சந்தித்துப் பேசினார்.

**யுவதி கொலை**

நேற்று வட அயர்லாந்து நகரமான லண்டன் டெரியில் காவல் துருப்புக்களுக்கும் குழப்பக்காரர்களுக்குமிடையில் நடைபெற்ற மோதலில் 14 வயதான யுவதி ஒருவர் கொலையுண்டார்.

வட அயர்லாந்தில் இதுவரை நடைபெற்றுள்ள கொலைகளுடன் இதையும் சேர்த்தால் 1000-ம் கொலைகளாகும்.

பெல்பாஸ்ட் நகரில் இடம் பெற்ற ஒருசம்பவத்தில் ஒரு போர் வீரர் காயமடைந்தார்.

## தர்மகர்த்தா சபை அங்குரார்ப்பணம்

காரதீவு, செவ்வாய்

புங்குடுதீவின் வடபகுதியில் அமைந்துள்ள கேரதீவு ஐயனார் ஆலயத்தை நிர்வகிக்கு முகமாக மேற்படி ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையொன்று அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டுள்ளது.

இதன் தலைவராக பொ. இராமநாதியும், உபதலைவராக க. நாகலிங்கம் ஆசிரியரும், ஆலய நிர்வாக முகாமையாளராக க. விவேகானந்தனும், பொருளாளராக திருமதி இலட்சுமி செல்லத்துரையும், செயலாளராக காசிப்பிள்ளை நடராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர் நிர்வாகசபையொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

## இளைஞன் தற்கொலை

புலோலி, செவ்

தன்னாலை வடக்கைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை (வயது 27) நேற்று முன்தினம் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். காதலில் ஏற்பட்ட தோல்வியே இவரது சோக முடிவுக்குக் காரணமெனச் சாட்சியங்களிலிருந்து தெரியவந்தது.

## கருத்தரங்கு

பருத்தித்துறை, செவ்

வடமராட்சி கிழக்கு காரியாதிகாரி திரு எம். தம்பிமுத்து தலைமையில் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கான கருத்தரங்கு ஒன்று அடுத்தவாரம் நடைபெறவுள்ளது.


**வேப்பங்கொட்டை தேவை**

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, திருக்கோணமலை ஆகிய இடங்களில் வைத்துப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ளவும்.

**சுந்தரம் பிறதர்ஸ்**
ஆயுள்வேத மருந்துகள், மருந்துச்சரக்குகள் வியாபாரிகள்
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## புதிய நிர்வாகிகள்

அரியாலை, செவ்

அரியாலை சனசமூகநிலைய புதிய ஆண்டு நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் விபரம்:

போஷகர்கள்: திரு வி ஆறுமுகம், திருமதி வசிப் பிள்ளை. தலைவர் திரு எஸ் கனகசிங்கம், உபதலைவர்கள் திரு கே கணேசன் திருமதி யோகராசா. செயலாளர் எஸ் சதாசிவம், உபசெயலாளர் எஸ் எம் ரஞ்சன், தனாதிகாரி: பி குலசேகரம்பிள்ளை, கலைக்காரியதரிசி திரு கே சோமசேகரம், விளையாட்டு காரியதரிசி திரு எஸ் டி குலநாதன்.

0 0

கோட்டை, செவ்

கொழும்புக் கச்சேரித் தமிழ்இலக்கிய மன்றத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் பின்வருமாறு:

காப்பாளர்: அரசாங்க அதிபர் திரு டங்கன் டி அல்விஸ்; தலைவர்: திரு சு கணேசன்; உபதலைவர்கள்: திருவாளர்கள் சி நமசிவாயம்; ச செல்லத்துரை; செயலாளர்: கே க மதிவதனன்; உபசெயலாளர்: திரு த சிதம்பரநாதன்; பொருளாளர்: திரு க வேலாயுதம்; நூலகப்பொறுப்பாளர்கள் திருவாளர்கள்: மு இராசரத்தினம்; இ தர்மரத்தினம்; நிர்வாகக்குழு அங்கத்தவர்கள்: திருவாளர்கள் செ புண்ணியமூர்த்தி; சி சோ திநாதன்; இ கணேசலிங்கம்; கணக்குப்பரிசோதகர்: திரு க விஜிசித்தம்பி.

0 0

பூநகரி, செவ்

பூநகரி மத்திய சனசமூக நிலைய புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: செ விநாயகமூர்த்தி; காரியதரிசி செ தில்நாதன்; பொருளாளர்: க மகேந்திரராசா; கணக்குப் பரிசோதகர்: திரு சி இராசநாயகம்; ஆறுபேர்கொண்ட நிர்வாகசபை உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0

நாவடி, செவ்

கொக்குவில் கற்புலத்து மனோன்மணி இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகத்தினர் வருமாறு:

போஷகர்: திரு சி அருளம்பலம் (நல்லூர் பா. உ.); தலைவர் திரு வ ம நடராசா; உபதலைவர்கள் திரு க சரவணமுத்து; திரு க சுந்தரம்; செயலாளர் திரு சே சோமசுந்தரம்; உபசெயலாளர் செல்வன் சி மாதவகுமார்; பொருளாளர் திரு பொ கனகரத்தினம்; உபபொருளாளர் திரு வே தம்பிமுத்து.

0 0

நீர்கொழும்பு, செவ்

நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்க 39 வது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர்: செனட்டர் திரு த நீதிராசா; தலைவர் திரு நா சண்முகநாதன்; துணைத்தலைவர்கள் திரு ஜெயம் விஜயரத்தினம் ஜே பி; திரு வ சுரேந்திரன்; திரு ச நடராசா டாக்டர் கே பாலசுப்பிரமணியம்; பொதுச் செயலாளர்; திரு இ பேரின்பநாயகம்; பொருளாளர் திரு சி முருகையா: துணைச்செயலாளர் திரு அ மயில்வாகனம்; துணைப்பொருளாளர்: திரு இராஜேந்திரன்; விளையாட்டுச் செயலாளர் திரு ச கதிர்காமநாதன்; நூல்நிலையப் பொறுப்பாளர் திரு ச இராசரத்தினம். கணக்குப்பரிசோதகர்: திரு என் பி கல்யாணசுந்தரம் 14 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

0 0

நாவடி, புதன்

கொக்குவில் திருவள்ளுவர் இளம் விவசாயிகள் கழகத்தின் பொதுக்கூட்டம் சி. மாதவகுமார் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போசகர்: திரு. ரி. இராசதுரை திரு. ஏ. கே பற்குணராசா. திரு ஏ வாமதேவன் தலைவர் செல்வன் சி. குகனேந்திரன் உப தலைவர் செல்வி கணேஸ்வரி பரமானந்தம் செயலாளர் செல்வன் இ ஸ்ரீரங்கநாதன் உப செயலாளர் செல்வி சர்வேஸ்வரி சுப்பிரமணியம் பொருளாளர்: செல்வன் கு குமரேசன்; உபபொருளாளர்: செல்வன் த பிரேமகுமார் கழகப்பொறுப்பாளர்; செல்வன் சி மாதவகுமார்; கணக்குப்பரிசோதகர்கள்: செல்வன் கே சிவராசா; செல்வன் ச சர்வானந்தன்.

நிர்வாகசபை யொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## தங்கம்மா அப்பாக்குட்டிக்கு பொன்னுடை

நாவடி, செவ்

"சைவத் தொண்டாற்றி வரும் செஞ்சொற் செம்மணி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சேவையைப் பாராட்டாமலிருக்க முடியாது. யாழ்ப்பாணத்துக்கு மட்டும் கிடைத்த தங்கமல்ல அவர். இந்தியா, மலாயா போன்ற உலக நாடுகளிலுமுள்ள சைவத் தமிழ் மக்களுக்குக் கிடைத்த தங்கம் இவர்.'

இவ்வாறு கொக்குவில் கற்புலத்து மனோன்மணி இந்துசமய அபிவிருத்திச்சங்கத்தின் 3வது ஆண்டு நிறைவுவிழாவின்போது பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்குப் பொன்னுடை போர்த்திய வைபவத்தில் உரையாற்றிய திரு. க. சுந்தரம் குறிப்பிட்டார்.

இந்துசமய அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த செல்வி இராசா கௌரி, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்குப் பொன்னுடை போர்த்தினார்.

இவ்வைபவத்தில் உரையாற்றிய பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கூறியதாவது:

"இறைவனை அடைவதற்கு மூன்று வழிகளுண்டென்றும் அவ்வழிகளின் சிறப்புப்பற்றியும் சிவம் பெருக்கிய செல்வர்கள் கூறிவைத்துள்ளனர். இறைவனை ஒலிவடிவமாகவும் உருவ வடிவமாகவும் ஒளிவடிவமாகவும் வழிபடலாம். தோத்திரங்கள் பாடி வழிபடுவது ஒலிவடிவ வழிபாடு ஆகும் தோத்திரங்களாக இங்கே குறிக்கப்படுவது பன்னிரு திருமுறைகள்"

நல்லூர் எம்., பி திரு. சி. அருளம்பலம் பேசுகையில் ஆலயத்துக்கு வருகின்ற ஒவ்வொருவரும் சமய ஆசாரசீலராய் வருதல் சிறப்பாகும். முன்னொளிலே மன்னர்கள் இறையருள் பெருக்கும் வகையில் சைவசமயத்தை வளர்த்தார்கள் இன்று இதுபோன்ற இந்து சமய விருத்திச் சங்கங்கள் வளர்த்து வருவது சிறப்பாகும்' என்றார்.

நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மாள் ஆலய முன்றலில் நடைபெற்ற இவ்விழாவின் போது திரு. எஸ். இராசையா, திரு எஸ் சிவானந்தன் ஆகியோரின் பண்ணிசையும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரானின் கதாப் பிரசங்கமும் இடம்பெற்றன.

## புங்குடுதீவுச் செய்திகள்

### நியமனம்

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் உயர்கல்வியைப் பெற்ற புங்குடுதீவு ஆறும் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வி மகேஸ்வரி தம்பிப்பிள்ளை அதே பாடசாலையின் வர்த்தக ஆசிரியராக கல்வி அமைச்சினால் நியமனம்செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

### உதவி அமைச்சர் உறுதி

அண்மையில் வடபகுதிக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்ட உதவிச் சுகாதார அமைச்சர் திருமதி சிவா ஒபயசேகரா, கடல் கடந்து சென்று நெடுந்தீவு அரசினர் ஆஸ்பத்திரியையும் பார்வையிட்டார் வைத்தியசாலையின் முக்கிய தேவைகளை நிறைவேற்ற தான் நடவடிக்கை எடுப்பதாக அவர் அங்கு உறுதியளித்தார்.

0 0 0

### விளையாட்டு மைதானம் வேண்டும்

புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலைக்கென ஒரு விளையாட்டு மைதானம் அமைக்குமாறு மேற்படி வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் வடமாநில வித்தியாதிபதி திரு டபிள்யு பி சி மகாதந்திலவைக் கேட்டுள்ளது.

0 0 0

### இடமாற்றங்கள்

புங்குடுதீவு குறிகாட்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியை திருமதி பொன்னம்மா புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

புங்குடுதீவு அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஆசிரியை திருமதி பி சிவகுரு குறிகாட்டுவான் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலைத் தலைமையாசிரியர் திரு பி தியாகராசா, அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலைத் தலைமையாசிரியராக இடமாற்றம்பெற்றுள்ளார். இவரது இடத்துக்கு புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு கு கனகசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார். புங்குடுதீவு வல்லன் ஸ்ரீ சண்முகநாதவித்தியாசாலை ஆசிரியர் திரு வி கோனேஸ்வரன், சரவணை நாகேஸ்வரம் வித்தியாசாலைக்கு இடமாற்றஞ்செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

### ஒத்திவைப்பு

புங்குடுதீவு ஏழாம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தர் மாணிக்கம் என்பவரது வீட்டைக் கொளுத்தியதாக அதேஊரைச் சேர்ந்த சுப்பிரமணியம் பாலசிங்கம் அல்லது பாலன் என்பவர் மீது ஊர்காவற்றுறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறைப் பதில் நீதிபதி திரு எஸ் கனகரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதி வழக்கை கார்த்திகை மாதம் ஆறும் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரி சார்பில் புறக்டர் ஆர் விசுவநாதனும், வழக்காளி சார்பில் புறக்டர் ஜிம்மி இராசரத்தினமும் ஆஜராகினர்.

......

### ஆசிரிய ஆலோசகர் கருத்தரங்கு

பருத்தித்துறை, செவ்

வடபகுதிஆசிரிய ஆலோசகருக்கான கருத்தரங்கு ஒன்று யாழ் நகரில் நடைபெறவிருக்கிறது இம்மாதம் 11ம்திகதி யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமிமண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கை வடபகுதி வித்தியாதிபதி திரு. டபிள்யு டி. ஸி மகாதந்தில திறந்துவைத்து உரை நிகழ்த்துவார்.



## ஹோமியோபதி டாக்டர்

வல்வெட்டித்துறை யைச் சேர்ந்த வ. தியாகராசா தம்பதிகளின் மகனும் சிதம்பராக்கல்லூரி, கொழும்புக் அகடமி கொழும்பு ஆகியவற்றின் பழைய மாணவனுமான தி. பரமசிவம் கல்கத்தாவில் நான்கு வருடம் ஹோமியோபதி மேற்படிப்பு படித்து சென்ற வருடம் நடந்த இறுதிப் பரீட்சையில் திறமையான சித்தியடைந்து டி. எம். எஸ். பட்டம்பெற்று நாடு திரும்பியுள்ளார்.

......

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**புதன் 8—9—71**

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

249 மீ அல்லது 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-00 இசைமாலை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

இரவு 6-15 சிறுவர் நிகழ்ச்சி 6-30 பெண்ணுலகம் 7-00 வாத்திய இசை, 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 விவாதம், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு.



# யாழ். பொலிஸ்தின விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் இம்மாதம் நடைபெறவிருந்த பொலிஸ் தினவிழா ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவிருந்த பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் வடபகுதி விஜயமும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. பின்னொரு தேதியில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொலிஸ் தினவிழாவில் இராணுவம், விமானப் படையினரும் கலந்து கொண்டு சிறப்பிப்பது வழக்கம். இந்நிலையில் அவர்கள் கலந்துகொள்ள முடியாதிருப்பதாலும் வேறு சில காரணங்களினாலும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த பொலிஸ் தினவிழா ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

# இன்றைய பலன்

ஆவணி மாதம் 23-ம் திகதி (8-9-71)

மேஷம்- முக்கியமான சந்திப்பு ஒன்று கிடைக்கும். முதியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும். சுற்றதார் பயனும் உண்டு. பொன்னான தினம்.

ரிஷபம்- துள்ளி வரும் வெள்ளிப்பணம் உங்கள் வாழ்க்கையைச் சோபிதமடையச் செய்யும். எதிர்பாராதவிருந்தினர் வருகைக்கும் இடமுண்டு.

மிதுனம்- பொறுமை கைவிட்டுப் போகும். மற்றவர்களிடத்தில் பொல்லாங்கு கேட்க நேரிடலாம். சிநேகிதவழியாக சில தொல்லைகள் தோன்றி மறையலாம்.

கடகம்- அதிர்ஷ்டகரமான தினம். இனி வாழ்க்கையில் திரவியலாபத்திற்கு இடமுண்டு. மணவாழ்வில் மகிழ்ச்சி தென்படும். பணம் பத்தும் செய்யும்.

சிம்மம்- சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும். செய்தொழிலால் நஷ்டம் ஏற்படலாம். புதிய முதலீடுகளை இன்று தவிர்த்தல் நன்று.

கன்னி- சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுவீர்கள். காத்திருந்த அன்பர்களுக்கு களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கும்.

துலாம்- தாமதகுணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம். வேண்டாத விவாதங்களால் விபரீதம் நேரிடும். நிதியில் நெருக்கடியும் தோன்றும்.

விருச்சிகம்- கனிவான நினைவுகளின் மத்தியில் இன்று வாழ்க்கையை நடத்துவீர்கள். பெரியவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

தனுசு- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள். ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும்.

மகரம்- அதிர்ஷ்டகரமான தினம். எத்தொழிலைச் செய்தாலும் அதன்மூலம் தகுந்த வருமானம் கிடைக்கும். இன்று திருப்தியான தினம்.

கும்பம்- தசவியத்துறையில் நஷ்டமேற்படுவதற்கு இடமுண்டு. கொடுக்கல் வாங்கல் மூலம் சண்டைகள் மூளமுடியும்.

மீனம்- இலட்சிய கனவுகள் இன்று கானல்நீராக மாறலாம். பின்னணியில் பிணக்கு இடம் ஏற்படும். எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# பரிசுத்த அன்னை மரி ஜெனனதினம் இன்று

— மோ. தர்சிசியஸ் —

பரமனின் அன்னை பாவமாசின்றிப் பாரிலே உதித்த பொன்னாள் இன்றாகும். ஆதாவது கடவுள் கன்னி ஒருத்தியை பாவமாசு இன்றிப் பிறக்கச்செய்த நாளாகும். தம்மை குமாரனையேகலை இம் மாநிலமீதில் உதித்திடச் செய்வதற்காக பெண்களுக்குள்ளே மாசற்ற ஒருவரைத் தேர்ந்தெடுத்தார். அமலனின் அன்னையாகிய மரியாள் பாவமாசு இன்றி உற்பவித்தது மாத்திரமல்ல வாழ்நாளில் பாவத்தின் நிழல்படியாது தூய்மையான வாழ்வு வாழ்ந்து வந்தார். எலிசபேத்தம்மாளின் 'பெண்களுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே' என்ற வாழ்த்தொலியின் மூலம் இதனை நாம் அறியமுடிகிறது.

கடவுளின் கருத்தினிலே நின்று விளங்கிய கன்னி மரியம்மாள் தன் வாழ்க்கையில் வாழ்வளிக்க வந்த வள்ளலின் வருகைக்கு ஆயத்தம் செய்தார். ஆண்டவனின் அடிமையாகத் தன்னைத் தாழ்த்திக்கொண்ட நாள் தொட்டு அமலனை உலகுக்கு அளித்து அவரது ஆரோகணம் வரைக்கும் அவர் புரிந்த அமைதிப்புரட்சி சொல்லுந் தரமன்று!

கடவுளின் மட்டற்ற வல்லபத்தினால் ஆண்டவனின் தாயாக வந்துதித்த கன்னி மரி மனுக்குலம் முழுவதற்குமே தாயாக விளங்குகின்றார். இதனை இறைமகனே மரணத்தின் பிடியில் கல்லுச்சியில் சிலுவையில் தொங்கும்போது எடுத்துக் கூறினார். அன்று முதல் இன்றுவரை எமக்காகப் பரிந்து பேசுபவராக பாதுகாப்பவராக விளங்கி வருகிறார் எமது அன்னை. உலக மக்கள் உண்மை ஒளியைக் காணவும், உன்னத வழியை நாடவும்வேண்டு என்று பூலோகத்தில் அடிக்கடி காட்சி அன்னை கொடுத்துவருகிறார். லூர்து பதியில் தமது அமலோற்பவத்தை உறுதிப்படுத்திய போதும் பாத்திமாவில் சிறுவர் மூவருக்குக் காட்சியளித்த போதும் மனுக்குலம் மட்டில் தமது மட்டற்ற கருணையையும் காவலையும் வெளிப்படுத்தினார்.

பாவிகள் மோட்சம் சேருவதற்கு ஏற்ற ஏணியாக அண்டி வந்தோரை அரவணைக்கும் அன்னையாக தவறிவிடுவோர்க்கு வழிகாட்டியாக ஆறுதல்வேண்டுவோருக்குத் தேறுதலாக அயர்ந்தோர்க்குத் தஞ்ச

(2ம் கலம் பார்க்க)

# குடும்பத் திட்ட பிரசாரம் கிராம மக்களுக்கே உரியது

யாழ்ப்பாணம், புதன்

குடும்பத்திட்டப் பிரசாரம் கொழும்பு போன்ற இடங்களில் வாழும் மக்களுக்காகச் செய்யப்படுவதல்ல, கிராமப்புற மக்களுக்காகவே இப் பிரசாரம் செய்யப்படுகிறது.

இவ்வாறு இலங்கை குடும்பத்திட்ட சங்கத்தின் புதிய செயலாளர் திருமதி எஸ். ஏ. திசநாயக்கா கூறினார். டாக்டர் சிவஞானசுந்தரம் தலைமையில் யாழ்ப்பாணம் புளூரிபன் ஹோட்டலில் நடைபெற்ற கூட்டத்தில் திருமதி திசநாயக்காவேதும் பேசுகையில் கொழும்பில் வாழும் மக்களுக்கு இது பற்றி நன்கு தெரியுமாகையால் எங்கள் உதவி அவர்களுக்குத் தேவை இல்லை. கிராமப்புற மக்கள் இது விஷயத்தில் அறியாமையும் பயமும் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குத்தான் எங்கள் உதவி தேவையாக இருக்கிறது என்றார்.

திருமதி சில்வியா பெரேரா பேசுகையில், இலங்கையில் குடும்பத் திட்டம் 1953ம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டது. 1954ம் ஆண்டு 55 கிளினிக்குகள் மட்டுமே இருந்தன. ஆனால் இப்பொழுது நாடு பூராவும் 440 கிளினிக்குகள் இருக்கின்றன என்றார்.

டாக்டர் சற்குரு பேசுகையில், இந்தத் திட்டம் நகரங்களைவிடக் கிராமப்புறங்களிலேயே சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கிராமப் புறங்களில் மருத்துவத் தாதிகள் மூலம் இவை செய்யப்படுகின்றன. தாய்மார்கள் இச்சிகிச்சையை அவர்கள் மூலம் செய்து கொள்ளலாம் என்றார்.

இக்கூட்டத்திற்கு வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், உதவி அரசாங்க அதிபர் திரு. போசேப், அரசாங்க வழக்கறிஞர் திரு. எஸ். கனகரத்தினம் ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

தென்னையை அழிக்கும்

# வண்டுகள் வெளிநாட்டு இறக்குமதியா?

கொழும்பு, செவ்

தென்னை மரங்களைப் பாதித்திருக்கும் ஒருவகை வண்டுகள் வெளிநாடுகளிலிருந்து வந்துள்ளனவா என இப்பொழுது அஞ்சப்படுகின்றது. வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட ஆர்க்கிடஸ் போன்ற மலர்ச் செடிகள் மூலம் இவை நாட்டுக்குள் வந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. ஆனால் இது இன்னமும் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

இந்த வண்டுகள் 1920-ம் ஆண்டில் பிஜித் தீவுகளிலும் 50-ம் ஆண்டுக்குப் பின்னர் மலேஷியா சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் காணப்பட்டனவாம். இந்த நாடுகளிலிருந்து இவை

(6-ம் பக்கம் பார்க்க)

## கிராமசபை 200 ரூபா நன்கொடை

யாழ்ப்பாணம், புதன்

வட்டுக்கோட்டை கிராம சபை பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்டவர்கள் நிதிக்கு 200 ரூபாவை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ளது.

## தந்திக்கம்பி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தந்திக்கம்பிகள் எவரிடம் இருந்தாலும் அவர் கைது செய்யப்பட்டுப் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்படுவரென்றும் அவசரகாலத் திட்டத்தின்கீழ் இந்நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் வடபகுதிப் பொலிசார் தெரிவிக்கின்றனர்

## கூட்டுமுன்னணி...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மிகவும் உயரே போய்விட்டன. இதன்மூலம் நாம் நமது வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லையென்பது தெரிகிறது. பொதுமக்கள் ஆதரவுடன்தான் பொருளாதாரத்தை வளர்க்க முடியும். ஒவ்வொருவரும் நாட்டின் நன்மைகருதி நாட்டுக்காக உழைக்கவேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

# பொன். கந்தையா நினைவுதினம்

புலோலி செவ்வாய்

காலம்சென்ற ஆட்சிமன்ற உறுப்பினரும் இடதுசாரிக் கட்சியை சேர்ந்தவருமான திரு. பொன். கந்தையாவின் சிரார்த்த தினம் நாளை உடுப்பிட்டித் தொகுதியிலும் பருத்தித்துறைத் தொகுதியிலும் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

பல இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவர்.

(5ம் கலத் தொடர்ச்சி

மாக விளங்கும். அன்னை மரி அவதரித்த இந்நாளைப் பக்தி பரவசத்தோடு கொண்டாடும் நாம், அன்னை எப்படிப் பாவவழியை விலக்கி நடந்தாரோ, அதேபோல் நாமும் பாவவழியை விட்டுப் புண்ணிய வழியில் நடக்க பரிசுத்த தேவ தாயின் உதவியை நாடுவோமாக.

இதோ! ரேமியா பரவசமூட்டும் ஓர் புதிய பவுடர்!

பசுமையும் நீடிக்கும் சுகந்தமும் கொண்ட ரேமியா,
விசேஷ முறையில் வாசனையூட்டப்பட்ட டால்க்.
மேலோங்கும் அழகுருவளிக்க உடலெங்கும் முகத்திலும் ரேமியா தடவுக!



சிறப்பறிய, இன்றே ஒரு டின்
ரேமியா
வாங்குக!
எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.
விலை ரூ. 2/35




ஓர் ரெக்கிட் அன்ட் கோல்மன்
உற்பத்தி.

# மரணபயம் போக்கும் அகோர விநாயகர்

### மணிவாக்கு

செலவுக்கு மேல் கூடுதலாக வருமானம் உள்ளவன் தனவந்தன். வரவுக்கு மேலே செலவழிப்பவன் ஏழை. —புருயெர்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஆவணி மாதம் 23-ந் திகதி (8-9-71)

## "பொது மன்னிப்பு"

கிழக்குப் பாகிஸ்தானில் சென்ற மார்ச் 1-ந் திகதி முதல் செப்டம்பர் மாதம் 5-ந் திகதிவரை நடைபெற்ற கலவர காலத்தில் குற்றஞ்செய்தவர்களுக்கும், குற்றம் செய்ததாகக் கூறப்படுபவர்களுக்கும் ஜனாதிபதி யாஹ்யாகான் பொதுமன்னிப்பு அளித்துள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது துணிச்சலான வரவேற்கத்தக்கதொரு நடவடிக்கை.

இந்த மன்னிப்பு கிழக்குப்பாகிஸ்தான் இராணுவம், பொலிஸ் படைகளைச் சேர்ந்தவர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளதாம். அவாமிலீக் தலைவரான ஷேக் முஜிபுர் ரஹ்மானுக்கும் மற்ற அவாமிலீக் தலைவர்களுக்கும் இந்த மன்னிப்பு அளிக்கப்பட்டுள்ளதா என்பது இதை எழுதும்வரை தெளிவாகத் தெரியவில்லை. அவர்கள் மீது தேசத் துரோகம், ஆயுதங்களுடன் கலகம் செய்தல் முதலிய குற்றச்சாட்டுகள் செய்யப்பட்டிருப்பினும், அவர்களுக்கும் மன்னிப்பளித்து விடுதலை செய்வதே முறை. அவரது விடுதலைச்செய்தியும் எந்த நிமிஷமும் வெளியாகுமென்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

டிக்காகானை நீக்கி அவருக்குப்பதிலாகஒரு 'சிவிலியனை' கிழக்கு பாகிஸ்தான் கவர்னராக நியமித்தது ஜெனரல்யாஹ்யாகானின் மனமாற்றத்துக்கும், அவரது புதிய கொள்கைக்குமான அறிகுறி என்று கொள்வது தவறாகாது. சுமார் 5 மாதகால இராணுவ அடக்குமுறையால் கிழக்குப்பாகிஸ்தான் மக்களை அடக்கமுடியவில்லை, ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளில் சுமார் மூன்றில் இரண்டு பகுதியினரை நீக்கி, அவர்களின் தொகுதிகளிலே இன்னும் நான்கு மாதங்களுக்குள் இடைத்தேர்தல் நடைபெறுமென்ற உத்தரவை வெளியிட்டிருப்பது, இப்புதிய கொள்கைக்கு முரணானதாகும்.

சென்ற 5 மாதங்களில் கலவரத்தில் ஈடுபட்டவர்களை எல்லாம் மன்னித்திருக்கையில் மக்கள் அமோகமான வாக்குகளால் தெரிவுசெய்த அவ்வளவு மக்கள் பிரதிநிதிகளையும் எதேச்சாதிகாரமாக பதவிகளிலிருந்து நீக்குவது ஜனநாயக தர்மத்துக்கு மாறுவதுடன், நிலைமையை மேம்படுத்த சற்றும் உதவாது. அவாமிலீக் மீது போடப்பட்டுள்ள தடையை இனியும் நீடிப்பதில் அர்த்தமோ, பயனோ இல்லை. இதற்கு மாறாக அந்தத்தடையையும் நீக்கி, முன்னர் நடைபெற்ற தேர்தல்மூலம் மக்கள் அளித்த தீர்ப்பை அப்படியே ஏற்றுக்கொள்வதே, பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டு அந்நாடு அமைதியாக முன்னேறுவதற்குச் சரியான வழியாகும்.

பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடத்தி, புதிய அரசியல் திட்டத்தை வகுத்து, ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தவேண்டுமென்ற நல்ல நோக்கத்துடனேயே ஜனாதிபதி யாஹ்யாகான் நடவடிக்கை எடுத்தார். பொதுத் தேர்தல் வெற்றிகரமாகவும், அமைதியாகவும் நடைபெற்றது. மக்கள் அளித்த தேர்தல் தீர்ப்பை அப்படியே ஒப்புக்கொண்டு, அதற்கிணங்க புதிய அரசியலைத் தயாரிக்க முற்பட்டிருப்பின் இவ்வளவு விபரீதங்கள் ஏற்படாமல் தவிர்த்திருக்கலாம். துரதிருஷ்டவசமாக, தவறான யோசனைகளுக்குச் செவிசாய்த்ததால் லட்சக்கணக்கான குடும்பங்கள் சீரழிந்து, உலகிலே பாகிஸ்தானின் நற்பெயருக்கும் பழுது ஏற்பட ஏதுவாயிற்று. இவ்வளவு பெரிய அரசியல் தவறு செய்துவிட்டவர் தொடர்ந்தும் நாட்டின் தலைவராக இருப்பதாயின் பொதுமக்களின் நம்பிக்கையும் ஒத்துழைப்பும் கிடைக்குமா? ஆகவே யாஹ்யாகான், புதிய தலைவரை நியமித்து, தாம் தலைமைப் பதவியிலிருந்து விலகிக் கொள்ளவேண்டுமென்று அமெரிக்கா ஒரு யோசனை கூறியுள்ளதாக பத்திரிகைச்செய்தி ஒன்று தெரிவிக்கிறது. இந்த யோசனையை ஜனாதிபதி யாஹ்யாகான் ஏற்பாரா? இந்த முக்கிய கேள்விக்கான பதிலில்தான் பாகிஸ்தானின் எதிர்காலம் பெரிதும் தங்கியுள்ளது.

## கி. வங்க அகதிகள் கஷ்டம்: பிரதமருக்கு ஒரு கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்
கிழக்குப் பாகிஸ்தான் அகதிகள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவும்படி பிரதமமந்திரி திருமதி சிறிமா வண்டாரநாயக்காவைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றை இலங்கை வெளிநாட்டு விவகாரங்கள் ஆய்வுக்குழு நிறைவேற்றியுள்ளது.

அண்மையில் இந்தியாவும் சோவியத்யூனியனும் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் இப்பிரதேசத்தில் கெடுபிடிப் போர் ஒன்றைத் தோற்றுவித்திருப்பதால் இலங்கை மண்டலசார்பற்ற கொள்கையைக் கண்டிப்பாகப் பின்பற்றவேண்டும் என்றும் இக்குழு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிடெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இந்த விநாயகர் சிலைக்கு ஓர் அமெரிக்கர் 25 ஆயிரம் டாலர் கொடுத்து விலைக்கு வாங்க முன்வந்தார். 25லட்சம் கொடுத்தாலும் இதை விற்க முடியாது என்று மறுத்துவிட்டேன்.

என்றிவ்வாறு ஆனந்தாருக் என்பவர் கொழும்பு செட்டியார்தெரு முத்து விநாயகர் சுவாமிகோயிலில் என்னிடம் தெரிவித்து பலராலும் வணங்கத்தக்குரிய இந்த அதிசய சிலையை எந்த மியூஸியத்திலும் கேவலம் ஒரு காட்சிப் பொருளாக வைக்கத் தாம் சம்மதிக்கப் போவதில்லை என்றும் ஏதாவது ஒரு கோவிலில் மக்களின் வழிபாட்டுக்கு வைக்க வேண்டுமென்பதே தம் உத்தேசமென்றும் பக்தியுடன் குறிப்பிட்டார்.

நெற்றியில் சந்தனப் பொட்டு. மேலுக்குச் சட்டையில்லாமல் பக்தியுடன் அந்தச் சிலைக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த ஓர் அன்பரிடம் கொழும்பு கலைச்சங்கக் காரியதரிசி பாலச்சந்திரன் அவர்கள் என்னை அழைத்துச் சென்று 'இவர்தான் ஆனந்தாருக்' என்று அறிமுகம் செய்து வைத்தார். பெயரைப் பார்த்தால் கிறிஸ்தவர் போலிருந்தது. ஆனால் நேரில் பார்க்கையில் அசல் ஈழத்துச் சைவர் மாதிரி சைவப் பண்பாட்டுடன் விளங்கினார்.

'இந்த அகோர விநாயகர்' எனும் சிலை தங்களுக்கு எப்படிக் கிடைத்தது?' என்று கேட்டதற்குத் தாம் சிலைகளைச் சேகரித்து வருவதை ஒரு பொழுதுபோக்காகக் கொண்டதாகவும் இந்தோனேஷியாவின் கிழக்கேயுள்ள பாலித்தீவில் இது கிடைத்ததாயும் சொன்னார். ஈழத்தில் மலைநாட்டில் பிறந்த இவரது கிறிஸ்தவர் பெயர் பாலின்டன் ருக். அவர் இந்துவாக மாறி ஆனந்தாருக் என்று தம் பெயரை மாற்றிக் கொண்டுள்ளார்.

0 0 0

சற்றே தாமதமாகச் சென்றேன், அக்கோயிலில் நுழையவும் முடியாதபடி அவ்வளவு கூட்டம். ஐந்து லாம்பு சந்தியிலிருந்து செட்டியார்தெரு வழியாக இந்த விநாயகரை ஒரு சிறிய ரதத்தில் வைத்து மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாகக் கோவிலுக்குக் கொண்டு வந்து மண்டபத்தில் உயரிய இடத்தில் எழுந்தருளச் செய்து சோடசோபசார பூசை நடத்தி வைத்தனர். அமைச்சர் குமாரசூரியர், செனேட்சபைத் தலைவர் ரத்நாயக்கா, திரு. எஸ். தொண்டமான் உள்ளிட்டுப் பல பிரமுகர்கள் கட்சி, மதம் முதலிய பேதமின்றி அங்கு கூடி மக்களுடன் சேர்ந்து வழிபட்டது, தெய்வசக்தியின்மூலம் இங்கு தேசிய ஒற்றுமை ஏற்படுமென்ற நம்பிக்கையை அளிக்கக் கூடியதாக இருந்தது.

அமைச்சர் உள்ளிட்டுப்பல தலைவர்களும் வழிபட்டுப்பிரசாதம் பெற்ற காட்சியைக் கண்டதும் தமிழகத்திலே விநாயகர் விக்கிரகம் உடைக்கப்பட்டதுதான் நினைப்பு வந்தது. 'இந்தச் சிலையை தமிழகத்துக்குக் கொண்டு செல்ல உத்தேசித்திருப்பதாக அறிந்தேன். அங்குள்ள திமுக அமைச்சர்கள் யாரும் வந்து இதுபோல் வழிபடுவாரா? ஆனால் பொது மக்கள் லட்சக்கணக்கில் வந்து வழிபடக்கூடும்.

கொழும்பு கலைச்சங்கத்தின் சேவையை அமைச்சர் குமாரசூரியர் பாராட்டி, கலையின் சிறப்பையும் தெய்வ வழிபாட்டின் முக்கியத்தையும் விளக்கினார். பல சமய ஒற்றுமையை செனேட் தலைவர் வற்புறுத்தினார். திரு. தொண்டமான் பேசுகையில் தாம் இந்தோனேஷியா சென்றிருந்தபோது அங்கு இந்துக்களாயிருந்தவர் மதம்மாறிவிட்டதாயும் அந்தமாதிரியான நிலை இங்கு ஏற்படாமல் இந்துக்கள் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டுமென்றும் சொன்னார்.

இந்த அற்புத விநாயகரைப்பற்றி யோகி ராஜையா எம. ஏ. அவர்கள் எழுதுவதாவது:

உண்மையை உணரும் வகையில் மரணபயத்தையும் அதர்மத்தையும் வெல்லக்கூடிய அளவு ஆத்மீக வலிமை தனிப்பட்ட ஜீவாத்மாவுக்கு இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பதே அகோரவிநாயகர் வடிவத்தின் தாற்பரியம்.

அகோரவிநாயகர் வழிபாடு இந்தியாவிலிருந்தே இந்தோனேஷியாவுக்குச் சென்றது என்பது சரித்திர உண்மை. இந்த அற்புதமான மரச்சிலை பாலித்தீவைச் சேர்ந்த இந்து மத சிற்பிகளின் கைவண்ணம் என்பதில் சந்தேகமில்லை. விக்கிரகத்தின் உருவஉடை மற்றும் வர்ண அமைப்புகள் அத்தனையும் பாலித்தீவு மக்களின் பாரம்பரிய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கின்றன.

### ஐயரான் எழுதுவது

எனது கருத்துப்படி இச்சிலை ஆயிரமாண்டுகள் பழமை மிக்கது. மலேசியா, சுமத்ரா, இந்தோனேஷியா (ஜாவா) ஆகிய நாடுகளுக்கு இந்திய இளவரசிகளோடு சிற்பக்கலைஞர்கள் சென்று குடியேறியமை சரித்திரரீதியான உண்மையாகும். இந்த அகோர விநாயகர் சிலையிலும் அது கண்டெடுக்கப்பட்ட பிரதேசத்திலும் மிகவும் உயர்ந்த இந்துமத கலாச்சாரத்தின் பிரதிபலிப்பைக் காணமுடிகிறது.

மரணபயம் போக்கும் இந்த அற்புத அகோரவிநாயகர் வழிபாடு உயர்ந்தசாதனை முத்தியை நல்கும். 'பயப்படாதே, விழி, எழு! நன்மையை அடையும்வரை அயராதே! மரணத்தை வெல்லும் வரை ஓயாதே' என்பதே இந்தமகாகணபதியின் சிலைகூறும் அர்த்தமாகும்.

இச்சிலையை திரு. தொண்டமானின் அழைப்பின்மீது முதலில் மலைநாட்டுக்கும், பின்னர் தமிழ்நாட்டுக்கும் கொண்டுசெல்லப் போவதாக அறிந்தேன். இதை யாழ்ப்பாண மக்களும் தரிசித்து வழிபடகலைச் சங்கத்தார் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

0 0 0

### சுவாமி ஸ்ரீரங்கானந்தா

கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனில் சென்ற எட்டரை ஆண்டுகளாக தெய்விகப் பணிகளைச் செய்த சுவாமி ஸ்ரீ ரங்கானந்தா அவர்கள், இம்மாதம் 13-ந் திகதி ரயில் வழியாக தமிழகம் திரும்புகின்றார். அவருக்கு வடமாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும், மலைநாட்டிலும் பல இடங்களில் பிரியாவிடைக்கூட்டங்கள் நடைபெற்றன. வேலணை, நயினாதீவு, சுருத்திறைத்துறை, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் நடந்த கூட்டங்களில் ஏராளமான மக்கள் கூடி அவரது சேவைகளைப் பாராட்டி, அவர் ஈழத்துக்கு சீக்கிரம் திரும்பிவரவேண்டுமென்றும், அவரது சேவை இலங்கைக்கு மிக அவசியமென்றும் கூறினர். சமய உண்மைகளை எளிமையாக மக்களுக்குப்புரியும்படியான தமிழில் பேசும் ஆற்றலாலும் இனிமையான பஜனை மூலமும் சுவாமி அவர்கள் இங்கு சிறப்பாக தமிழ் மக்களின் மனதைக் கவர்ந்துள்ளார். அவரது சேவை ஒரு பெரியவர் கூறியபடி, இங்கு ஸ்ரீராமகிருஷ்ண மிஷனுக்கு மட்டுமன்றி, இலங்கைக்கே பெரிய நஷ்டமாகும். சுவாமி விவேகானந்தர் உலகில் பல நாடுகளிலும்சென்று சமய உண்மைகளைப் பரப்பியது போல், தமிழ்கூறும் நல்லுலகெங்கும் அதேசேவையைச் செய்து, ஆன்மீகத்தைப்பரப்பக்கூடிய பெரும் பணியை சுவாமி அவர்கள் செய்யக்கூடும்.

சென்ற சனிக்கிழமையன்று, கொழும்பு ஸ்ரீராமகான சபையார் சுவாமி அவர்களுக்கு ஓர் பிரியாவிடை உபசாரம் நடத்தி, கலையழகுடன் கூடிய ஒரு தட்டத்தை காணிக்கையாகக் கொடுத்தனர். சுவாமிக்கு பதிலாக இந்தியாவிலிருந்து எம்.ஏ பட்டம்பெற்ற ஓர் இளம் சுவாமி வருவதாயும் ஆங்கிலத்தில் அவர் நன்கு பிரசங்கம் செய்யக்கூடியவரென்றும் தெரிகிறது.

......

### தென்னை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிகின்றது.

இலங்கையின் தென்னை வளர்ச்சியைத் தடுப்பதற்காக சர்வதேச ரீதியில் இயங்கும் மோசடிக்கும்பல் ஒன்று இந்த வண்டுகளை இங்கு கொண்டு வந்திருக்கக் கூடும் என்றும் சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள்.

## இந்தியாவில் ஆராய்ச்சி செய்வார்



யாழ்ப்பாணம், புதன்
ஈழத்தின் பிரபல விஷக்கடி வைத்தியரான யாழ்ப்பாணம் கொட்டடி திரு. க. சிற்றம்பலம் இந்தியா சென்று பாம்புக்கடி சம்பந்தமான வைத்திய ஆராய்ச்சி மேற்கொள்ளவிருக்கிறார். தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி நூலகத்தின் அழைப்பையேற்று இவர் அங்கு சென்று விஷக்கடி வைத்திய ஆராய்ச்சிகளில் ஈடுபடுவார்.

இலங்கை ஆயுள் வேத சபையின் உபகாரச் சம்பளத்தில் இவர் இந்தியா செல்வார் என நம்பப்படுகிறது. அகில இலங்கை சித்த ஆயுள் வேத வைத்திய சங்கம் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.